கொழும்பு தமிழ்ச் சங்கம்

# பொது



பிட்டும் தேங்காய்ப் பூவும் போல
ஒட்டிய உறவு; உடைப்பவர் இல்லை!



எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

– மகாகவி பாரதியார்

விலை 10/=

ஆண்டுச் சந்தா 100/=

வெளியீடு :
PROFESSIONAL PSYCHOLOGICAL COUNSELLING CENTRE
BATTICALOA.

நூலகம்



போது

போது -7 இதழ்-42

வைகாசி - ஆனி 2005
தோற்றம் 5-5-1998

நிர்வாக ஆசிரியர்
(Managing Editor)
சுவாமிஜி
போல் சற்குணநாயகம்.யே.ச.

ஆசிரியர்
(Editor)
வாகரைவாணன்

நிர்வாகம்:
(Management)
சி.எம்.ஒக்கஸ்

பணிமனை:
உளநல உதவிநிலையம்,
15, வெபர் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி:
065-2222842

E-mail
ppcc@diamond.lanka.net

# போதி மரத்துப் புத்தர்

மூடத்தனம் என்னும் இருள் இந்தியாவை முழுமையாக மூடியிருந்த ஒரு காலத்தில் ( 2500 ஆண்டுகளுக்கு முன்பு ) ஓர் ஒளி அங்கு உதயமாயிற்று. அந்த ஒளி 'ஆசிய ஜோதி ' என்று பிற்காலத்தில் போற்றப்பட்டது.

புத்தர் என்னும் புது ஒளிதான் அது. அரசவம்சத்தில் பிறந்து ஓர் நாட்டை ஆளும் உரிமை பெற்றிருந்தும் அதனை தூக்கி அப்பால் எறிந்து விட்டு அழியா ஞானம் எனும் செல்வத்தைத் தனது அனுபவங்கள் ஊடாகத் தேடிப் பெற்ற ஓர் அதிசய மனிதர் அவர்!

பந்தபாசங்களை அறுத்தெறிந்து விட்டு ஒரு பரதேசியாக கையில் பிச்சைப் பாத்திரத்தோடு அலைந்து திரிந்தவர் – பிராமணியத்தின் வைதீககோட்பாடுகளுக்கு (வேள்வி, உயிர்ப்பலி, சடங்குகள்)எதிராகப் பெரும் புரட்சி செய்து சத்தியம், கருணை, அகிம்சை, சாந்தி எனும் உன்னதமான வேதத்தை உபதேசித்தவர் – ஒருபேரொளியாகப் பிரகாசித்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது ?

கபிலவஸ்து (இன்று நேபாளத்தில்) ஈன்றெடுத்த இந்தக் கருணை மகன் கடவுள் பற்றியே கதைக்காதவர். (AGNOSTIC) ஒளி வெளியில் அன்று – அது ஒவ்வொருவரினதும் உள்ளத்தில் ஒளிர்கின்றது என்று உரக்கவே உச்சாடனம் செய்தவர்.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்பதைத் தனது வாழ்க்கை மூலம் காட்டிய மகான் அவர். பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர், கிருஷ்ணமூர்த்தி முதலான ஞானிகள் புத்தரின் இந்தக் கோட்பாட்டையே பெரிதும் விரும்பி எழுதியும் பேசியும் வந்தமையை உலகம் நன்கறியும்.

அரசியலை – ஆட்சியைத் துறந்து விட்டு அறிவொளியாகப் பிரகாசித்த ஒரு ஆன்மீக புருஷனை – எங்கள் தேசத்தில் பெரும்பான்மை இனவாதிகள் அரசியலுக்குள் இழுத்து வந்து தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதைப் பார்க்கும் போது அந்த மகான் மீது நமக்கு அனுதாபந் தான் ஏற்படுகின்றது.

கைமுனு காலத்தில் புத்தரின் சீடர்கள் என்று கருதப்பட்டவர்களால் அரங்கேற்றப்பட்ட இந்தக் கபட நாடகம், இன்று அதன் உச்சத்தை எட்டியிருக்கிறது. அன்று – ஒரு எல்லாளன்! இன்று எத்தனை எல்லாளன்கள் ? அரசியலுக்குள் மதத்தைக் கலந்ததால் உண்டான பயங்கர விளைவு அல்லவா இது ?

சிங்கள அரசியல் வாதிகள் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய நேரம் இது. கௌதம புத்தர் என்ற கதிர்ப்பிழம்பை தமது இனவாத அரசியல் என்னும் காரிருளால் இவர்கள் மூடி மறைக்கப் பார்க்கிறார்களா ? இது தான் நாம் எழுப்பும் கேள்வி!

அன்புடன்
வாகரைவாணன்



# புனிதன் நீ

மனிதனாகப் பிறந்து
மாசில்லாத வாழ்வால்
புனிதனாக உயர்ந்தாய்
புவி உன்னை வணங்கும்!

ஆயனாக இருந்து
ஆண்டு இருபத்தாறு
மாயம் என மக்கள்
மனமெல்லாம் நிறைந்தாய்

எட்டு திசையும் சென்று
ஏழை எளியோர் எல்லாம்
தொட்டுத் தழுவி நின்றாய்
தோழனாக இனித்தாய்

இன மத பேதம்
என்றும் பார்த்ததில்லை
மனதால் உயர்ந்ததாலே
மகாத்மாவாகத் திகழ்ந்தாய்

உன்னைச் சுட்ட கயவன்
உள்ளம் திருந்தும் வண்ணம்
மன்னித் தன்பு காட்டி
மனித தெய்வம் ஆனாய்!

உன்னைப் போல ஒருவன்
உலகம் கண்டதில்லை
கண்ணிலுந்தன் உருவம்
காலமெல்லாம் இருக்கும்

அன்பு அமைதி வேண்டி
அகிலமெங்கும் சென்றாய்
வன்பு போரை எதிர்த்து
வாழும் வரை உழைத்தாய்!

வயதும் நோயும் உன்னை
வாட்டி வதைத்த போதும்
அயர்வேயின்றி நீயும்
அரிய பணிகள் செய்தாய்!

மனிதர் எல்லாம் ஒன்று
மதத்தில் பேதம் இல்லை
இனிய கருத்து நூறு
இதயம் தன்னில் பதித்தாய்!

உலகை சரித்திரம் தன்னை
உனது பணி மாற்றும்
பலரும் உன்னை இன்று
பக்தியுடன் நினைப்பார்



பற்றில்லாத துறவி
பத்தரை மாற்றுத் தங்கம்
முற்றும் கற்ற ஞானி
முகமும் கண்ணும் சொல்லும்

கத்தோலிக்க உலகைக்
கட்டி ஆண்ட அரசன்
சத்தம் இன்றி நூறு
சாதனைகள் செய்தோன்

இந்த உலகம் தன்னை
இனிய உந்தன் பண்பால்
சொந்தமாக்கிக் கொண்டாய்
சொர்க்கம் சென்ற போதும்

உந்தன் பிரிவு கண்டு
உலகம் உருகிப் போகும்
தந்தை தந்தை என்று
தாங்காதழுது புலம்பும்

முக்திப் பேறு பெற்றாய்
முடிவில்லாத இன்பம்
கர்த்தனோடு இணைந்தாய்
கை குவித்து நின்றோம்!

ஆரணி

## நாட்டிற்காக வாழ்ந்த நல்ல உள்ளங்கள்

'உன்னதமான இந்திய இளைஞனே ! சமுதாய வீதியிலே நீ கைவீசி நடக்கும் போது, நீ மட்டும் தனியாக நடப்பதாக ஒரு போதும் சோர்ந்து விடாதே! உனக்குப் பின்னால், இந்த மண்ணின் ஐயாயிரம் ஆண்டு மரபார்ந்த பெருமைகளும் தொடர்ந்து வருவதை உணர்ந்து நட!'என்றார் விவேகானந்தர்.

எது இந்த மண்ணின் மரபார்ந்த பெருமை?
'துறவும் தொண்டும் மட்டுமே இந்த அன்னை பூமியின் அரிய தேசிய லட்சியங்கள் !' என்கிறார் விவேகானந்தர்.

துறவு என்பது எல்லாருக்கும் எளிதில் சாத்தியமில்லை. ஓர் உண்மையான துறவிக்கு ஐந்து இலக்கணங்கள் அவசியம் என்று சனாதன தர்மம்சாற்றுகின்றது. கையில் வைத்திருக்கும் திருவோட்டுக்கு மேல் எந்த உடைமையும் துறவிக்கு இருக்கலாகாது. இயற்கையில் அமைந்த மரத்தடி கற்குகையே இருப்பிடம்: கந்தையே அணியும் ஆடை; ஒற்றை வளையல் போன்று யாருமற்ற தனிமை: பேதமற்று அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செய்தல். இந்த இலக்கணங்களுடன் இன்று ஒரு துறவியையும் நம் வாழ்காலச் சமுதாயம் சந்திக்க வாய்ப்பில்லை!

காவி உடுத்து, கற்றைச் சடைமுடி வளர்த்து,கானகத்தில் அத்துவானத் தனிமையில் கண்மூடி தவமிருக்கும் துறவைவிவேகானந்தர் விரும்பவில்லை. அவருடைய துறவு என்பது,எல்லாவற்றையும் நீத்தல்இல்லைசுயநலமின்றி அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செய்து ஆரத்தழுவி அவற்றின் நலனுக்காகத் தன்னை முற்றாக அர்ப்பணம் செய்வது.

சந்நியாசம் என்பது வாழ்வைத் துறப்பது அன்று: செய்யும் செயலின் பலனைத் துறப்பது. வேள்வி என்பது நெய்யூற்றி நெருப்பு வளர்ப்பதல்ல, சமூக நலன் என்னும் அக்கினியிலே சுயநல ஆசைகளைச் சுட்டெரிப்பது. இந்தப் புரிதலோடு பொதுவாழ்வில் இன்றைய இளைஞர்கள் ஈடுபட வேண்டும். அதுதான் ஆன்மிக ஞானி விவேகானந்தரின் ஆசைக் கனவு!



விவேகானந்தர் வலியுறுத்திய தொண்டும் துறவும் கொண்ட மனிதர்களைப் பொதுவாழ்வில் நாம் கண்டெடுக்க வேண்டாமா? அப்படிப்பட்ட மனிதர்கள் இந்த மண்ணில் நரம்போடும், சதையோடும் நடமாடவில்லையா? கடந்த காலத்தைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்.

மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பி அறிவுச்சுடர் கொளுத்திய பகுத்தறிவுப் பகலவன் பெரியார்.

ஈ. வே. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகிலுள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்கொண்டு அதே பணியாய் இருப்பவன் என்று பிரகடனம் செய்து பொதுவாழ்வுக்கு வந்தவர் பெரியார்.

'இந்த நாட்டில் பார்ப்பனர், பஞ்சமர், பறையர், சக்கிலியர் இன்னும் எந்தச் சாதியினரையும் காணமுடியாது. பெயரைக் கூட காதில் கேட்க முடியாது. எல்லாரும் மனிதர்கள் என்று எங்கு பார்த்தாலும் முழங்க வேண்டும். இதுவே நம் முதல் லட்சியம் என்று முழங்கி, இந்த மண்ணில் சாதிகளற்ற சமுதாயம் மலர்வதற்குத் தள்ளாத வயதிலும் இடையறாது உழைத்த மகத்தான மனிதர்.

தேர்தல் களத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக நாக்கு யாகம் நடத்தாதவர் பெரியார். அரசியல் களத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன் தான் வகித்த ஈரோடு முனிசிபல் சேர்மன் பதவியைத் துறந்தார். 1919– களில் மாத வருவாய் 20 ஆயிரம் தந்த வணிக நிறுவனத்தை இழுத்து மூடினார். கதர்த் துணியைத் தலையில் சுமந்து தெருத் தெருவாய் விற்றார். கள்ளுக் கடை மறியலில் மனைவியுடன் கைதானார். கள் தரும் மரங்கள் என்பதற்காக தனக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். தாழ்த்தப்பட்ட புலையரும், ஈழவரும் கோயில் வீதியில் நடக்க வைக்கத்தில் போராடிச் சிறை சென்று வெற்றி வீரராய் வலம் வந்தார்.

வருணாசிரமத்தின் ஆணிவேரை அறுப்பதற்காகவும் சாதிகளற்ற சமுதாயத்தை வளர்ப்பதற்காகவும், வர்க்க பேதங்களை அழிப்பதற்காகவும்,

பெண்ணடிமை ஒழிப்புக்கும் தான் நடத்திய புரட்சி வேள்வியில் தன்னையே ஆகுதியாக்கிக் கொண்டவர் பெரியார். 94 வயதிலும் உடல் நலிவைப் பொருட்படுத்தாமல், நோய் தந்த வேதனையைத் தாங்கிக்கொண்டு ஊர் ஊராய் மக்களைத் தேடிச்சென்று மூத்திரச் சட்டியுடன் மேடையில் அமர்ந்து மூன்று மணி நேரம் சுயமரியாதைக் கருத்துக்களை முன் வைத்து முழங்கிய பெரியாருக்கு இணை சொல்ல இன்றைக்கும் உலகம் முழுவதிலும் இன்னொருவர் இல்லை!

'காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக் கஞ்சியில்லை, பாழுக்கு உழைத்தோமடா! என் தோழனே ... பசையற்றுப் போனோமடா!'என்று கண்ணீர் விட்டுக் கதறியவர் ... ஏழையாய்ப் பிறந்து, ஏழைகளுக்காகவே வாழ்ந்து, கூரை ஒழுகும் குடிசையில் ஏழையாகவே கண் மூடியவர் தோழர் ஜீவானந்தம்..

காரைக்குடிக்கு அருகில் சிராவயலில் ஆசிரமம் நடத்திய காந்தியவாதியாய், பெரியாரின் சுயமரியாதைத் தொண்டராய், பின்னாளில் ஒரு காங்கிரஸ் சோஷலிஸ்ட்டாய் வெவ்வேறு பாதைகளில் பயணித்து, இறுதியில் மார்க்சியத்தில் மனம் கலந்து கடைசி வரை அப்பழுக்கற்ற கம்யூனிஸ்ட்டாய் வாழ்ந்து மறைந்த ஜீவா ஒரு கட்சிக்காரரில்லை: கொள்கைக்காரர்!

காரைக்குடி கல்லூரியில் ஜீவா பேசுகிறார். உணர்ச்சியின் விளிம்பில் நின்று உரத்த குரலில் மாணவர்களிடையே அவர் முழங்கும் போது அவருடைய காலில் இருந்த கட்டி உடைந்து ரத்தம் வழிந்து வேட்டி நனைகிறது. பார்த்த கல்லூரி முதல்வர் பதறித் துடிக்கிறார். இரண்டு நாட்கள் விருந்தினர் விடுதியில் தங்கி ஓய்வெடுக்க ஜீவாவை வற்புறுத்துகிறார்.

அப்போது முதலமைச்சராய் இருந்த குமாரசாமி ராஜா ஜீவாவைப் பார்க்க ஓடோடி வருகிறார். உங்களை ஏன் இப்படி வருத்திக்கொள்கிறீர்கள்? நாம் அனைவரும்காங்கிரஸில் ஒன்றாய் உழைத்துச்சிறைசென்றவர்கள்தானே! நேரு அணைகட்டவில்லையா? தோழிற்சாலைகள் அமைக்கவில்லையா? நேருவே ஒரு நல்ல சோஷலிட்தானே! நீங்கள்ஏன் எங்களோடு நலமாய் இருக்கக் கூடாது? இப்படி இடைவிடாமல் ஊர் ஊராய்ப் பேசிப் பேசி ஏன் உங்களை அழித்துக் கொள்கிறீர்கள்? என்று பாசம் ததும்பப் பரிவுடன் கேட்கிறார்..



நீங்கள் அணைகள் கட்டியது; தொழிற்சாலைகள் தொடங்கியது; கல்விக்கூடங்கள் உருவாக்கியது எல்லாம் உண்மைதான். ஆனால், இன்னமும் அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழியற்று ஏழைகள் வாடுகிறார்களே! ... ஏழைகள் இந்த மண்ணில் உள்ளவரை , அவர்கள் நலனுக்காக ஏழைக் கட்சிமேடைகளில் அன்றாடம் பேச வேண்டியதுதான்; பேசிப் பேசிச் சாக வேண்டியதுதான். வேறு என்ன வழி? என்று சொன்னவர் ஜீவா. ஏழைத் தொழிலாளிக்கும், கூலி விவசாயிக்கும் பேசிப் பேசியே தன்னுடைய 56–வது வயதில் மரணத்தின் மடியில் சாய்ந்தார்.

ஜீவா என்ற அந்த அரிதினும் அரிதான மானுடன் மாற்று வேட்டிக்கும் வழியில்லாமல்தான் வாழ்ந்தார். வண்ணாரப்பேட்டை சட்டமன்றஉறுப்பினராய் 1952 –ல் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பும், சேரிக் குடிசையில்தான் விளிம்பு நிலை மனிதர்களுடன் வாழ்ந்தார். மரணம் அவரைத் தழுவியபோது அவருக்கிருந்த ஒரே உடைமை மேற்கு தாம்பரம் கஸ்தூரிபா நகரில் புறம்போக்கு நிலத்தில் மண்சுவர் கூட இல்லாத, மழை விழுந்தால் ஒழுகும் ஒரு கீற்றுக் கொட்டகை மட்டும்தான்.

ஊழலின் நிழல் படாத ஓர் உயரிய ஆட்சியை ஒன்பது ஆண்டுகள் தமிழ் மக்களுக்குத் தந்தவர் காமராஜர். இருண்ட ஏழை நெஞ்சங்களில் கல்வி வெளிச்சத்தை இலவசமாகப் பாய்ச்சி,ஆறுகள் ஓடும் இடங்களில் எல்லாம் அணைகள் கட்டி விவசாயத்தை வளர்த்து , தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை இந்தியாவில் இரண்டாம் இடத்தில் நிறுத்தி, பொய்மையும் போலித்தனமுமின்றி நேர்மையான நல்லரசியல் நடத்தி, ஆட்சிஅதிகாரத்தைத் தானாகவே துறந்து, தேர்தலில் தோற்ற பின்பும், கண் மூடும் வரை மக்கள் நலனுக்காகவே தொண்டு புரிந்தவர் காமராஜர்.

'பெற்ற தாயைப் பக்கத்தில் வைத்துக்கொண்டால் அந்தத் தாயைத் தேடி விருதுநகரிலிருந்து ஒவ்வொரு உறவாய் நம்வீடு வந்து சேரும், அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசும் அதிகாரதுஷ்பிரயோகம் நடந்தாலும் நடக்கும். அதற்கு நாம் இடம் தரலாகாது' என்று தாயையே தவிர்த்து, திருமலைப் பிள்ளை வீதியில் தனிமைத் தவமிருந்தவர். முற்றும் துறந்த ஆதிசங்கரரும், பட்டினத்தாரும், கூடத் துறக்க முடியாத உறவு தாயின் உறவு! அந்தத் தாயையும் பொதுவாழ்க்கைத் தூய்மைக்காக தள்ளி வைத்தவர் காமராஜர்.

விடுதலை வேள்வியில் 9 ஆண்டுகள் சிறைவாசம்: 12 ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரஸின் தலைமை ; 5 முறை சட்டமன்ற உறுப்பினர்; 4 முறை நாடாளுமன்ற உறுப்பினர்; 9 ஆண்டுகள் தமிழகத்தின் முதல்வர்; 5 ஆண்டுகள் அகில இந்திய காங்கிரஸின் தலைவர்; 2 முறை இந்தியப் பிரதமர்களை உருவாக்கிய ஒரே தமிழர் ... காமராஜர். இவ்வளவுக்குப் பிறகும் தனி வாழ்வில் அவருக்கென எஞ்சியது 60 ரூபா; 10 கதர் வேட்டி, சட்டை.

காமராஜர் கண் மூடினார். அவர் வாழ்ந்த வீட்டை அதன் உரிமையாளர் எடுத்துக் கொண்டார். அவர் பயன்படுத்திய காரை கட்சி எடுத்துக்கொண்டது. அவருடைய உடலை அக்கினி எடுத்துக் கொண்டது!.

'ஜனத் தலைவர் யார்? என்ற கேள்விக்கு பாரதி தந்த பதிலைப் படியுங்கள். 'யாவன் ஒருவன் தனது ஜனன தேசமாகிய இந்தியாவானது, இந்த வறிய நிலையால் இருப்பது பற்றி இராப்பகல் வருந்துகிறானோ, யாவன் ஒருவன் இந்த முப்பது கோடி இந்தியரும் வயிறார உண்பதற்குற்கு உணவும், உடுக்க உடையுமின்றித் தவிக்கிறார்களே என மனமிரங்கி கண்ணீர் சொரிகிறானோ ,யாவன் ஒருவன் பொதுஜனங்களுக்கு வந்த சுக துக்கங்களும், கஷ்ட நஷ்டங்களும் தனக்கு வந்ததாக எண்ணி அனுதாபிக்கிறானோ, யாவன் ஒருவன் இந்தத் துன்பங்களை நிவர்த்திப்பதன் பொருட்டுத் தனதுஉயிரையும் இழக்கத் தயாராய் இருக்கிறானோ ... அவன் ஒருவனே ஜனத்தலைவன்!'

திருத்தப்படாத நிலம் பயனற்றுப் போகும். தடுக்கப்படாத வெள்ளம் தாளாத துன்பத்தைத் தரும். கடிவாளம் இல்லாத குதிரை கண்டபடி ஓடும், நம் இந்தியச் சமூகத்தின் பொதுவாழ்க்கை இப்போது களர்நிலமாய், காட்டாற்று வெள்ளமாய், கடிவாளமற்ற குதிரையாய் நசிந்துவிட்டது.சமூகப் பொறுப்பு உணர்வுடன், இனி இளைஞர்கள்தான் இதைச்சீர்செய்யவேண்டும்.

பாரதியின் பார்வையில் பெரியாரும், காமராஜரும், ஜீவாவுமே ஜனத் தலைவர்கள். தன்னலம் மறுத்துப் பொதுநலத்துக்காகத் தொண்டாற்றும் மனிதர்கள்தான் விவேகானந்தரின் பாதையில் உண்மையான துறவிகள். அவர்கள் ஆன்மீகத்தில் இருந்தால் என்ன? அல்லது, அரசியல் அரங்கில் கலந்தால் என்ன,?பெரியாரும், பெருந்தலைவரும், ஜீவாவும் துறவிகள் இல்லையெனில், இங்கே யார் துறவி ? ( ஆனந்த விகடன் )



# ஒற்றுமை உறவுகள்

இளைய நிலா
எம். ரி. எம். யூஜின்

பலத்காரப்
பிரயோகங்கள் – இன்று
பாசங்களை
பரிதாபக் கண் கொண்டு
எம்மை (ப்)
பார்க்க வைக்கின்றன ....!

சமுதாயப் பூங்காவில்
அவர்கள் தெளிக்கும்
துவேஷ விஷ (மங்களை)
எந்த வல்லரசுதான்
உற்பத்தி செய்கின்றதோ
தெரியவில்லை ....!

பேச்சுக்கள்தான் இன்னும்
பல்லிளிக்கின்றன ....
ஆனால் – என்னலாபம்
எங்களுக்கு கிடைத்துள்ளது
என்பதை எண்ணிப் பார்த்தால்
எல்லாம் பூஜ்ஜியந் தான் .....!

இப்பொழுதெல்லாம்
நாங்கள் – சுவாசிக்கும்
ஒட்சிசனில் கூட
ரத்த வாடை வீசுகின்றது!.

இன்னும் ... இன்னும் ...
எங்களின்
தேச அரங்கில்
துவேஷ நாடகம்
அரங்கேறினால்
இருக்கின்ற - சொற்ப
நிம்மதிகள் கூட
சோர்ந்து விடும் ...!

எங்களின்
துணிவுகள் கூட
இன்று ...
ஒற்றுமையைத் தேடி
பணிவிடை செய்கின்றன ...!

எங்கள் தேசத்தில்
"பியதாஸவும்"...
"பாலகுமாரும்" ...
"பதுருதீனும்" ...
பாசங்களை இன்னும்
இழப்பதை விரும்பவில்லை ...!

அதனால் தான்
சொல்கிறோம் ...
எங்களுக்கு
ஒற்றுமையை
ஊட்டி விடுங்கள் ...
இல்லை - நெருங்கிய
உறவாக்கி விடுங்கள் ...1



# மனதில் உறுதி வேண்டும்

" எவனொருவன் தன் வாழ்க்கைக் காலத்தில் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டவனாயிருக்கிறானோ அவனுக்காக வெற்றியின் கதவுகள் நிலையாகத் திறந்து விடப்படுகின்றன. அதேவேளை,எவனொரு வன் தன் வாழ்க்கைக் காலத்தில் ஏற்பட்டுக் கொள்கின்ற சோதனை களையும், வேதனைகளையும் கண்டு தளர்ச்சியுற்று வருந்துகிறானோ, அவனுக்காகத் தோல்வியின் கதவுகள் நிலையாகத் திறந்து விடப்படுகின் றன என்பது "உலகளாவிய ரீதியில் வெற்றிகர - வெற்றி முறை"ஆலோ சகர்களின் ஒருமித்த கருத்தாகும்.

இக் கருத்தாக்கமானது எவ்வித ஆய்வுக்கும் உட்படுத்தப்படாது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும். எங்கள் வாழ்க்கைக் காலத்தில் ஏற்படும் துன்ப துயரங்கள் சோதனைகளை வேதனைகளை நினைத்து நினைத்து வருந்தி தளர்ச்சியுறுவது எப்போதும் எமது முன்னேற்றத்தினை பாதிப்பதாக அமைந்து விடுகிறது. இந்நிலையில் வெற்றி என்பது எட்டப்பட முடியாத தொரு கற்பனை எண்ணக் கருவாக அமைந்துவிடுகிறது. இந்த நிலையிலேதான் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் ஒருங்கே அமைந்த உறுதியான உள்ளத்தை கொண்டிருக்கவேண்டியது அவசியமாகின்றது.

"வெற்றிகர-வெற்றிமுறை" ஆலோசகர் எப்போதும் வலியுறுத்தும் கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு அமைந்திருக்கிறது. "வெற்றியடையத் தவறும் அல்லது தோல்வியைத் தழுவிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதையே எப்போதும் நினைவு படுத்தி வேதனையின் விளிம்புக்குச் சென்று தளர்ச்சியடைந்து வருந்துவதனைக்காட்டிலும் ஏன் இத்தகைய தோல்வி ஏற்பட்டது ?என்பது பற்றிச் சிந்திப்பது இனி ஏற்பட இருக்கும் தோல்வியைத் தவிர்ப்பதற்கும் வெற்றிப்பாதையை நோக்கி சரியாக பயணிப்பதற்கும் வழி சமைக்கின்றது.

இதிலிருந்து உய்த்துணரக் கூடிய முக்கியக் கருத்து யாதெனில் தோல்வியை நினைத்து வேதனை கொண்டு தளர்ச்சியடைவதானது எந்தவொரு பயனையும் தருவதில்லை என்பதுடன் அது ஒரு சூனியப் பிரதேசத்தினுள் பயணிக்கவும் வழிகோலிவிடும் என்பதாகும்.

இதனால் தான், வெற்றி முறை ஆலோசகர்கள் எண்ணங்களை மேம்படுத்துங்கள் என அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். "எண்ணங்களை மேம்படுத்துதல்"என்பது எந்தவொரு நிலைமையிலும் வெற்றி அடைவதற்கான சிந்தனையைக் கொண்டிருப்பதைக் கருதுகின்றது. இதன் மூலம் வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளையும் ஒருவர் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய ஆளுமையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வாழ்க்கையில் ஏற்படுகின்ற சகலவற்றையும் சமாளிக்கின்ற தன்னம்பிக்கை, திறமை, நிதானம் என்பவற்றை கொண்டிருக்கின்ற ஒருவர் வாழ்க்கைப் பாதையில் வெற்றியுடன் வீறு நடை போட முடிகின்றது.

"எப்போதும் முதல் தரமாகவே இருங்கள்" என்று கருத்தும் எப்போதும் துன்பதுயரங்கள் சோதனைகளை வேதனைகளை நினைத்து வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாந்தர எண்ணங்களால் மூளையை நிரப்பிக் கொள்ளுதல் பயனற்றதொன்றாகும். சிறியவற்றை சிந்திப்பதைப் போலவே பெரியவற்றறைச் சிந்திப்பதும் சுலபமானதே.

ஒருவன் தனது எண்ணங்களின் விளைவாகவே உருவாகின்றான். அதாவது ஒருவன் ஆழமாக எதைச் சிந்திக்கின்றானோ அதுவாகவே அவன் ஆகிவிடுகின்றான். எனவே, ஒருவன் அவனது அழுத்தமான எண்ணங்களின் அளவுக்கே சிறப்பானவனாகவோ, வெற்றியாளனாகவோ ஆகின்றான்.

கலாநிதி வில்லியம் ஆஸ்லர் "ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு நாள் வாழ்க்கை போதுமானது" என்ற கோட்பாட்டினை முன்வைத்துள்ளார். இதன்படி நாளையப் பளுவை நேற்றையப் பளுவோடு சேர்த்து இன்று தூக்க முயற்சிக்கும் போது பலசாலியும் தடுமாறுகிறான் என்பதை உய்த்துணர முடியும்.

அதாவது ஒரே நேரத்தில் மிக அதிகமான பளுவைத் தூக்கிச் செல்ல முயற்சிக்கும் போது அதுஎங்களுடைய உடலை மாத்திரமன்றி மனதையும் நசுக்கி விடுகின்றது என்பதுடன் வெற்றிக்கான உணர்ச்சி, உந்துதல் யாவற்றையும் நொறுக்கி விடுகின்றது.



ஆனாலும் நடைமுறை உலகில் பலரும் நாளைய பாரத்தை கற்பனையில் சுமக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். அதைப் பற்றி அல்லது அது குறித்து நான் என்ன செய்யப் போகின்றேன். ஒரு வேளை இப்படி நடந்துவிட்டால் இத்தனை வேலைகளைச் செய்ய எனக்கு எங்கே நேரம் இருக்கப்போகிறது? என் வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் ? வேதனைகள், துன்பங்கள் .... இதை எல்லாம் எப்படி என்னால் தாங்கிக் கொள்ள இயலும்.?

இனிமேலும் இனிவரும் காலங்களிலும் எனக்கு எத்தனை தோல்விகள், வேதனைகள், துன்பங்கள் வரப்போகின்றதோ? அதை எவ்விதம் நான் தாங்கிக் கொள்ள முடியும் ? இந்நிலையில் வெற்றி என்பது எப்படிச் சாத்தியமாகும் ?..... இவ்விதமாக எத்தனையோ சிந்தனைகள்! இந்நிலையில் மேலெழுந்து எங்கள் உணர்வுகளையும், வெற்றிக்கான உந்துதலையும் மழுங்கடித்து விடுவதில் முனைப்புடன் பங்களிப்புச் செய்து கொண்டே இருக்கும்.

எனவே,தான் நேற்றைய நிகழ்வுகள் பற்றிய மறுபரிசீலனைகளிலும் நாளை பற்றிய எதிரான கற்பனைகளிலும் நேரத்தை விரயம் செய்வதைத் தவிர்த்து இன்றைய பணிகளில் இவர்கள் கவனம் செலுத்துவதே வெற்றிக்கான திசையை துல்லியமாக எடுத்துக் காட்டும்.

வில்லியம் ஆஸ்லர் கருத்துப்படி உங்கள் வாழ்க்கையை தனித்தனி நாட்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள். நேற்றைய நாட்களை முற்றிலும் மூடிவிடுங்கள். நாளைய தினங்களின் கதவுகளையும் சாத்தி விடுங்கள். இன்று ஒருநாள் மட்டும் வாழக்கற்றுக் கொள்ளுங்கள்.அப்போது நீங்கள் வெற்றி கொள்வதற்கு ஒருநாள் பிரச்சினை மட்டுந்தான் இருக்கும். ஒருநாள் பிரச்சினைகளை எவருமே வெற்றி கொண்டு விடலாம்.

ரோபேட் லூயிஸ் ஸ்டீவன்சன் கருத்துப்படி,"ஒவ்வொருவரும் அவர்களுடைய பாரத்தை எவ்வளவு கடினமாக இருந்தாலும் இரவு வரும் வரை சுமந்தால் போதும். அது எவ்வளவு கடினமாக இருந்தாலும் அவ்வேலையை ஒருவரால் செய்துவிட முடியும். ஒவ்வொருவரும் இருபத்து நான்கு மணி நேரங்களுக்கு இனிமையாக, பொறுமையாக, அன்பாக, தூய்மையாக வாழ்ந்துவிட முடியும்.

இங்கே கடந்த கால வேதனைகளுக்கும் தோல்விகளுக்குமான சிந்தனை மூடப்பட்டு விடுகின்றது. இதனால் வெற்றியை நோக்கிய நகர்வு மிகக் கூர்மை அடைகின்றது

முடிந்து போன ஒன்றுக்காக அதைப் பற்றி நினைத்து சதா வருந்திக் கொண்டிருத்தல் வெற்றியாளருக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்றாக உள்ளடக் கப்படுவது இல்லை. இதை வெற்றியாளர்களின் வரலாறு மூலம் அறிந்து கொள்ள முடியும். கைகள் இரண்டையும் கால்கள் இரண்டையும் யுத்தத்தில் இழந்த ரஷ்யப் போர் வீரன் வாயிலே எழுதுகோல் பொருத்தி "சாவுக்கே சவால்" என்ற நாவலை எழுதி முடித்தான்.

அதன் பின் அவன் உலகறிந்த நாவலாசிரியன் ஆனான் உளவியல் நிபுணர் வில்லியம் ஜேம்ஸ் சொல்லிய கருத்தை நோக்குதல் பொருத்தப்பாடுடையதாகும். "முடிவெடுத்து ஒரு வேலையைத் தொடங்கிய பிறகு அதன் விளைவு என்னவாக இருக்கும் என்ற கவலையை அடியோடு விட்டொழியுங்கள்".

பெரும் சிந்தனையாளர்களும் சாதனையாளர்களும் இவ்விதமாகத் தான் வெற்றியடைந்துள்ளார்கள்.இந்தவழியில் கிடைக்கின்ற பெரும்அமைதியே தெளிந்த சிந்தனைக்கும் ஆரவாரமற்ற ஆற்றலுக்கும் காரணமாகின்றது.முதலில் தங்களுடைய நாட்களையும், பின்னர்தங்களுடைய பணிகளையும்,பிரித்து வெற்றி கண்டிருந்தால் அவர்கள் சராசரி மனிதர்களாக இருந்திருக்கமாட்டார்கள். இதைச் செய்கிறவர்கள் எப்போதும் அமைதியின் கம்பீரத்திற்கும் ஒருமைப்பட்ட சிந்தனையின்உறுதிக்கும் சொந்தக்காரர்களாகி இருப்பார்கள்.வெற்றியும் தவிர்க்க முடியாமல் அவர்களை வந்தடைந்திருக்கும்.

ஹெலன் கெல்லர் கண்பார்வையற்றவள், செவிப்புலனற்றவள், வாய்பேச முடியாதவள், வறுமையிலே வாழ்ந்து கொண்டிருந்தவள், ஆனால், தளர்ச்சியற்ற உறுதியான மனநிலையைக் கொண்டிருந்தவள், வெற்றி பெற்றே யாவது என்கின்ற உறுதி பூண்டாள் மற்றவர்களுக்கு உதவுவதில் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்கின்ற முடிவுக்கு வந்தாள், உலகத்தில் வாழ்ந்த பெண்மணிகளுக்கு சிறந்த முன் உதாரணமாகத் திகழ்ந்தாள். ஹெலன் கெல்லரிடம் இருந்த உடல்ஊனங்கள் மாற்ற முடியாதவை என்பதையும் கவன த்தில் கொள்ள வேண்டும். தன்னுடைய குறைபாடுகளை வெற்றி கொள்ளுவ தற்கான மன உறுதியினை அவள் பயன்படுத்தினாள்.



இந்தக் குறைபாடுகளுடனேயே மகத்தான சாதனைகள் புரிய வேண்டுமெனத் தீர்மானித்தாள்

சாண்டோ என்பவர் மிகவும் பலவீனமான நோயாளியாகத்தான் வாழ்க்கையைத் துவங்கினார். சாண்டோ மனம் சோர்ந்துவிடவில்லை. அவர் விரும்பியது வெற்றி. மன உறுதியுடன் தேகப்பயிற்சி செய்து உடல் வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். அவர் காலத்தில் மிகவும் பலசாலி என்கின்ற பெயரையும்பெற்றார். இவரைப் போன்றே சில ஆண்டுகளுக்குப் பிறகு உடல் ஊனமுற்ற பலவீனமான உடலை உடைய ஜோர்ஜ்ஜோவெட் என்கின்ற சிறுவன் மனச்சோர்வை விடமனவுறுதியே ஆக்கபூர்வமானது என்கின்ற முடிவுக்கு வந்தான். அவனுடைய முடிவு சரியானதே, தன்னுடைய நிலைமையை எண்ணி அவன் வருந்தாமலும், மற்றவர்கள் தனக்காக வருத்தப்பட வேண்டும் என்று எதிர் பார்க்காமலும் தன்னுடைய மனதையும் உடலையும் மேலும் வலுப்படுத்திக் கொண்டான். என்ன நிகழ்ந்தது? அதிசயம் எதுவும் நிகழவில்லை.'செயலுக்கு ஏற்ற விளைவுதான் பெறுபேறு என்பதாகும்" என்கிற இயற்கை விதி செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. பத்து ஆண்டுகளில் ஜோர்ஜ் ஜோவெட் உலகத்தில் மிகச் சிறந்த பலசாலி என்ற பெயரைப் பெற்றான்.

நவீன மருத்துவத்தால் உடலின் பல குறைபாடுகளை போக்கி விட முடியும், இருந்தாலும் மன உறுதி என்பது மிகப் பெரிய அம்சம். பல சந்தர்ப்பங்களில்முதல் முயற்சியில் சிகிச்சை தோற்றுப்போவதுண்டு.அதனால் பலரும் குணமடைகின்ற எண்ணத்தை விட்டு விட்டு சோர்வடைந்து விடுகிறார்கள்.தோமஸ் அல்வா எடிசன் 1000தடவைகள் விடாமுயற்சியுடனும் மனவுறுதியுடனும் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் தான் அளப்பரிய கண்டுபிடிப்புக்களை இந்த உலகிற்குத் தர முடிந்தது. உலகின் தலை சிறந்த விஞ்ஞானியாக வெற்றி பெற முடிந்தது. எடிசன் தனது பரிசோதனைகளில் காட்டியதைப் போல, எவரும் தொடர்ந்து முயற்சி செய்வதில் தமது உறுதியைக் காட்ட வேண்டும்.

கடந்த கால மகிழ்ச்சியற்ற விடயங்களை அலட்சியப்படுத்துகின்ற மன இயல்பினை ஏற்படுத்திக் கொள்வது வெற்றிக்கு மிக முக்கியப் பங்களிப்புச் செய்யும் காரணியாகும். இவ்வாறு கடந்த கால தோல்விகளை

ஏற்றுக் கொண்டு அதனை அலட்சியம் செய்யும் மன இயல்பு மேலோங்கும் ஆயின் தேவையற்ற மனச் சோர்வு ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

கடந்த கால நிகழ்ச்சி நிகழ்ந்து போனவை . கடந்த காலத்தை எத்தனை முறைஒருவர் நினைவுபடுத்திக் கொண்டாலும் அதை மாற்றி விட முடியாது. அதுவே கடந்த காலத்தின் மகிழ்ச்சியற்ற நினைவுகளுக்காக ஏன் இப்போது கஷ்டத்தை அனுபவித்து மனச் சோர்வை ஏற்படுத்த வேண்டும். கடந்த கால தோல்விகளால் ஏன் எதிர் காலத்தின் மாபெரும் வெற்றிகளையும் சாதனைகளையும் மழுங்கடித்துக் கொள்ளல் வேண்டும். ?

பீதோவன் சாகாவரம் பெற்ற ராகங்களை செவிடாக இருந்த நிலையில் தான் உருவாக்கினார்.

கவிஞர் மில்டன் இழந்த சொர்க்கம் என்ற காவியத்தை பார்வையற்ற நிலையில் தான் எழுதினார்.

அலெக்சான்டர் போப் என்ற ஆங்கிலக் கவிஞர் உடல் ஊனமுற்றவர் , அவரால் நகர முடியாது. ஆங்கில இலக்கியத்தின் மிகப் பெரிய சாதனைகளை அவர் படைத்தார்.

யூலியஸ் சீசர் காக்கை வலிப்பு நோயினால் அவதிப்பட்டார். இருந்தும் பல நாடுகளை வென்ற மாவ்ரராகத் திகழ்ந்தார். காக்கை வலிப்பு வரப் போகிறது என்கிற உணர்ச்சி ஏற்பட்ட உடனேயே, போரை நடத்துவதற்கான யோசனைகளைச் சொல்லி விட்டு சுயநினைவு இழந்த நிலையில் படுத்து விடுவாராம். சுய நினைவு வந்தவுடன் எதுவுமே நடக்காதது போல தளபதி நிலையில் ஆணைகளைப் பிறப்பிப்பாராம்.

ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட் இளம் பிள்ளை வாதத்தினால் கால் ஊனமுற்ற நிலையிலும் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார்.

ஜோன் பன்யன் சிறையில் இருந்த போதே எழுதிய "யாத்திரிகனின் புறப்பாடு" என்ற புத்தகம் ஆங்கில இலக்கியத்தில் ஒப்பற்ற படைப்பாக கருதப்படுகின்றது.



ரோபேட் லூயி ஸ்டீவன்சன் ஒரு மணி நேரம் கூட இருமலில் இருந்தும் நெஞ்சுவலியிலிருந்தும் விடுபட்டது இல்லை. கயரோகத்தினாலும் காய்ச்சலினாலும் எப்போதும் அவதிப்பட்டார். அந்த நிலையிலும் "புதையல் தீவு" போன்ற அருமையான கதைகளை எழுதி முடித்தார்.

பல்லாயிரக்கனக்கானவர்கள் உடல் ஊனமுற்ற நிலையிலும், தங்களின் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டு வாழ்க்கைக்கு தங்களை சரி செய்து வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் மனச் சோர்வடையவில்லை கடந்த காலத்தை நினைத்துவருந்தி தளர்ச்சியடைந்து விடவில்லை.

அவர்கள் தங்கள் எதிர் காலச்சாதனைகளுக்காகவும் அளப்பரிய வெற்றிக்காகவுமே எப்போதும் முழு மூச்சோடு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை நோக்கினால் அந்தவித குறைபாடு எதுவும் இல்லாமல் வாழ்க்கையைப் பற்றி குறை கூறிக் கொண்டிருக்கும் நாம் வெட்கத்தால் தலை குனியவேண்டியிருக்கும்.

கைகள் இல்லாமல் கால்களால் கார் ஓட்டுகிறவர்கள் இருக்கிறார்கள்.

**இராகவன்**

கால்கள் இல்லாமல் கைகளால் அல்லது செயற்கை கால்களால் நகர்ந்து சென்று சுறுசுறுப்பாக கடமையாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எவரும் அனுதாபத்தை தேடுகிறவர்கள் அல்ல. தங்கள் குறைபாடுகளை ஈடுசெய்ய மிக உயர்ந்த கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டவர்கள் இவர்கள். இவர்களை விட அதிஷ்டசாலி களான நாம் இவர்களின் உயர்ந்தக் கோட்பாடுகளைத் தேடிக் கண்டு பிடித்தால் போதும்.

"நாம் எதை நினைக்கின்றோமோ அதுவாகவே ஆகிவிடுகின்றோம்" என்ற கோட்பாடு நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும். இதன் படி நோக்குவோமாயின் நாம் எமது எதிர் காலத்தின் பெறுமதி மிக்க வெற்றிகளையும் சாதனைகளையும் எண்ணிக் கொண்டு முன்னேற்றப்

பாதையை நோக்கிப் பயணிப்பதற்கு பதிலாக இனி எங்களால் எந்தவொரு சாதனையினையும் மேற்கொள்ள முடியாது.

வெற்றி என்பது எமக்கு வெகு தொலைவில் இருக்கின்றது. எல்லாமே முடிந்து போய் விட்டது என்பதையே எப்போதும் நினைத்துக் கொண்டு கடந்த கால தோல்விகளுக்காகவே மனம் வருந்திக் கொண்டிருப் போமாயின் வெற்றி என்பது எப்போதும் வெகு தொலைவிலேயே இருக்கும். எனவே வெற்றியாளர் எப்போதும் தளர்வடையா மன நிலையினைக் கொண்டிருப்பது அவசியமாகின்றது.

எமிலி கூ என்ற அறிஞரின் கருத்து பின்வருமாறு அமைந்துள்ளது. "ஒவ்வொரு நாளும் எல்லா வழிகளிலும் நான் மேலும் மேலும் சிறப்படைந்து வருகிறேன் என்று திரும்பத் திரும்பச் சொல்வதனால் மிகுதியான பயன் கிட்டுகிறது."

எப்போதும் தவிர்க்க முடியாத நிலையில் வாழ்க்கையில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி ஒரு சுழல் சக்கரம் போன்று வந்து வந்து போகிறது. வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள், துன்பங்கள், எத்தனையோ! அத்தனை தோல்விகளையும் பட்டியல் போடுவது நமது மனச்சுமையை அதிகரிக்கவே செய்யும். அதற்காக நாம் மனச் சுமையை அதிகரித்துக் கொள்ள அனுமதித்தலாகாது. இவ்விதம் மனச்சுமையை அதிகரிக்க அனுமதித்தால் அந்த சுமையே எங்கள் வெற்றிப் பாதையில் இருந்து திசை திரும்பி துன்ப சகதியினுள் அமிழ்ந்து விடும்.

இவ்விதம் மனச் சுமையை அதிகரித்துக் கொள்ள அனுமதிப்பவர்கள் நிரந்தரமாகவே வெற்றிப் பாதையில் இருந்து முற்றிலும் விலகி துன்பச் சேற்றினுள் அமிழ்ந்து விடுகிறார்கள். எனவே இதனை நீக்கிக் கொள்ளவேண்டியது ஒருவரின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்யும் மிக முக்கிய காரணியாக அமைகின்றது. இதனை நீக்கிக் கொள்வதற்கு வெற்றி முறை ஆலோசகர் கலாநிதி எம். ஆர். கொப்மேயர் பின்வரும் ஆணித்தரமான ஆலோசனைகளை முன் வைக்கின்றார்.

முதலில் இழப்பு ஏற்பட்டுவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். அதை ஒப்புக்கொள்ளாமல் இருப்பது தற்காலிக நிவாரணமாக



வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் அவ நம்பிக்கை என்கின்ற மயக்கம் மெல்ல மெல்ல விலகுகின்ற போது யதார்த்தத்தை எதிர் நோக்கத்தான் வேண்டும். நிகழ்ந்து விட்ட சோகத்தை நம்ப மறுப்பது மன நிலையில் பெரிய தீங்கினை விளைவிக்ககூடியது. உங்களுடைய மனநிலை ஆரோக்கியத்தை நீங்கள் கெடுத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் சோகத்தைக் கெடுத்துக்கொள்ளாமல் இருக்கவேண்டும் ஆனால் சோகத்தை வெளிப்படையாகத் துணிச்சலுடன் எதிர் நோக்க வேண்டும்.

யதார்த்தத்தை துணிச்சலுடனும் வெளிப்படையாகவும் எதிர் கொள்வது ஆறுதலையும் பலத்தையும் அளிக்கும். நடந்தது நடந்துவிட்டது என்று ஒப்புக்கொள்ளுங்கள். இந்த முதலடியை நீங்கள் எடுத்து வைத்த பிறகுதான் அனுமதிக்கான அடுத்த அடிக்கு நீங்கள் செல்ல முடியும்.

சோகமான இழப்பை நீங்கள் ஒப்புக்கொண்ட பிறகு உணர்ச்சி பூர்வமான ஆறுதலைப்பெற, அந்த இழப்பை ஏற்றுக்கொள்கின்ற மனநிலையினை நீங்கள் அடைந்து விடுகிறீர்கள். தவிர்க்க முடியாததை ஏற்றுக் கொள்வது மனித சமுதாயத்தின் மிகப் பெரிய சாதனை ஆகும். நிகழ்ச்சியின் மீது அல்லது நிகழ்ச்சிகளின் மீது நமக்கு கட்டுப்பாடு இல்லை என்பதை உணர்கின்றபோது ஏற்றுக்கொள்வதன் மூலம் அதன் விளைவுகளின் மீது அதன்கோட்பாட்டினை கொண்டு வந்துவிடுகின்றோம்.

அடக்கத்தோடும் பணிவோடும் ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு அதன் விளைவுகளை சந்திக்கின்ற அச் சக்தி உங்களிடம் தோன்ற ஆரம்பிக்கின்றது.

எதையும் தாங்குகின்ற வலிமை நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. மனப்பூர்வமாக தூரதிஷ்டத்தை ஏற்றுக்கொள்கின்ற போது, வேறு எந்த சக்தியையும் விட மிகப் பெரிய மனது சோர்ந்து விட ஆரம்பிக்கின்றது. தவிர்க்க முடியாததை எதிர்த்து போராடுவதிலும் மனத்தளவில் சோர்ந்து போய் தளர்வடைவதிலும் பயன் இல்லை. இதை அறிந்திருப்பவர்களே வெற்றியாளர்களாகத் திகழ்கின்றார்கள். இத்தகைய வெற்றியாளருக்கான நடைமுறை எடுத்துக் காட்டுக்களாக பின்வருவோர் திகழ்கின்றனர்.

தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவன் நெல்சன் மண்டேலா – இவர் கறுப்பு மலர் என்று அழைக்கப்படுகின்றார். பல வருடங்களாக சிறைவாசம் அனுபவித்த பின்னர் –தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியானார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் – பல்வகைப்பட்ட இன்னல்களின் மத்தியில் கொண்ட கொள்கையில் இருந்து தளராது இயங்கியதன் மூலம் பலஸ்தீனத்தின் விடுதலை தேவதையானவர்.

மியன்மாரின் ஜனநாயக சார்புத் தலைவி ஆங்சாங் சூகி – கடந்த 19 மாதகாலமாக மியன்மார் இராணுவத்தினால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு 6–5–02அன்று விடுதலை செய்யப்பட்டார். 1989– 1995வரையும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இக் காலப்பகுதியில் தான் ( 1991) இவருக்குசமாதானத்திற்கான நோபல் பரிசும் கிடைத்தது. தனது கொள்கைக்காக தனது உயிர்க் கணவரின் மரணச்சடங்கிற்குக் கூட அவர் சமுகமளிக்கவில்லை.

கியூபாவின் புரட்சித் தலைவர் பிடல் கஸ்ரோ தம்மின விடுதலைக்காய் பல்வேறு தோல்விகள், துயரங்கள் மத்தியில் சளைக்காமல் போராடி கியூபாவின் புரட்சித் தலைவராகத் திகழ்கின்றார்.

தமிமீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சிங்களப் பேரின வாதத்தினால் ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலைக்காகக் பேரினவாதத்தைஎதிர்த்தவர். சொல்லொண்ணா இழப்புக்களுக்கும், துயரங்களுக்கும் மத்தியில் தளராத துணிவோடு போராடி தமிழினத்தின் ஒரே தலைவராக வெற்றி கண்டிருப்பவர்.

அனுசரித்து செயற்படுதல்–ஒப்புக் கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல், இரண்டும் அனுசரித்து போவதற்கு பாதை வகுக்கின்றன.மூன்றாவது நிலையை நாம் அடைவதே மனத்தை தொடர்ந்து செயற்படும் அமைதி நிலைக்கு இட்டுச் செல்லும். நேர்ந்துவிட்ட துரதிஷ்ட சூழ்நிலையில் , விளைவுக்கேற்ப அனுசரித்து நடப்பவர்களே தொடர்ந்து முன்னேறுபவர்களாய் இருக்கிறார்கள்.



செயற்பாட்டை மேற்கொள்ளல் – சோக நிகழ்ச்சியின் விளைவுகளை சமாளிக்க செயற்பாட்டை மேற்கொள்ளுதல் அவசியம். விதி ஒருகதவை மூடுகின்றபோது நம்பிக்கை இன்னொரு கதவை திறந்து வைக்கின்றது என்பது தான் வாழ்க்கையின்நியதி.

முடிவாக , இவையாவற்றையும் தொகுத்து நோக்கும் போது வெற்றியாளர்கள், சாதனையாளர்கள் என்று இணங்கானப்படுபவர்களும், அவர்களின் பின்னணியினை நோக்கும் போது எத்தகைய தோல்விகளையும், துன்பங்களையும், அவலங்களையும், துரதிஷ்டங்களையும் சந்தித்த போதும் அவற்றால் மனம் சோர்ந்து தலையில் கைவைத்து மூலையில் உட்கார்ந்து விடவில்லை.

மாறாக தமது இலக்கை நோக்கி முனைப்புடன் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள், நகர்ந்திருக்கிறார்கள்.ஆனால் தலையில் கைவைத்து தமது தோல்விகளை நினைத்து வருந்தி மூலையில் உட்கார்ந்தவர்கள் முன்னேறியதுமில்லை. வெற்றி அடையவும் இல்லை.

நன்றி– உலக தமிழோசை

இப்பொழுது சிங்களம் , தமிழ் முதலிய மொழிகளைப் பேசுவோர் இயக்கர், நாகர் என்பவர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறுவது சாத்தியமானதாகும்.

வரலாற்றுப்பேராசிரியர், பரணவிதான்
( செ. கிருஸ்ணராசாவின் இலங்கை வரலாறு– பக்கம் 12)

# இருளில் ஒரு தேசம்

## சுனாமி தந்த சோகம்

'கடல் வருது ' என்று மக்கள் ஒலமிட்டு ஓடிப்போவதைக் கண்ட கதிரவன் பெரும் ஆச்சரியம் அடைந்தாலும், அவனையும் ஒருவித பரபரப்பு ஆட்கொள்ளுகின்றது. இந்தச் சமயத்தில் என்ன செய்வது? ஊரோடு ஒத்து ஓடுவதா ? இல்லை . . . . என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்ட அவன் ஒரு முடிவுக்கு வந்தவன் போல தனது தாய், தந்தை, சகோதரியிடம் விசயத்தைச் சொல்லி அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டான்.


ஆண்டு அனுபவித்த பெற்றோருக்கும் அச் செய்தி ஆச்சரியத்தையே தருகின்றது. 'இந்தக் காலத்தில் எல்லாம் புதினமாகத்தான் இருக்குது' என்று பரிகசித்த அவன் தந்தை செல்வநாயகம் கடலுக்குப் பயந்து வீட்டை விட்டு வெளியேறும் எண்ணத்தையும் அலட்சியம் செய்தார். ஆனால் எந்த ஒரு விடயத்தையும் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும் இயல்பினையுடைய அவன் தங்கை சந்தியா, ஏன் அண்ணா, சூறாவளி, வெள்ளம் போல கடலும் வரலாம் தானே . . . ஊரில் உள்ள சனங்கள் எல்லாருமா பொய் சொல்லுவாங்க . . . ? நெருப்பில்லாம புகை வராது . . . ஏதோ நடந்திருக்கு . . . அதனால தான் உடுத்த உடையோடு சனங்கள் ஓடுதுகள் . . . நாமளும் வெளியேறுவது தான் புத்திசாலித்தனம். ஊரோடு ஒத்தோடணும் . . . என்றாள் தீர்க்கமாக.

தங்கையின் வார்த்தையில் இருந்த நியாயத்தை அப்படியே ஏற்றுக் கொண்ட கதிரவன், தாயைப் பார்த்து, அம்மா. . . வெளிக்கிடுங்க . . . எல்லாரும் ஓடும் போது நாம மட்டும் வீட்டில இருக்கிறது நல்லதில்ல . . . என்று சொன்ன அவன், முக்கியமான சாமான்களை மட்டும் எடுத்துக் கொண்டால் போதும் என்றான் தன் தங்கை சந்தியாவிடம்.

தமையன் சொல்வதற்கு முன்பே சில ஆவணங்களை எடுத்து ஒரு பேக்கில் திணித்துக் கொண்ட சந்தியா, தாய், தந்தையை அவசரப் படுத்தினாள். மகளின் அவசரத்தை பொறுத்துக் கொள்ள முடியாத தந்தை 'இப்ப என்ன உலகமா அழிஞ்சி போச்சி ? ஏன் அவசரப்படுகின்றாய்' என்றார் கடுகடுப்பாக.



வீட்டின் முன் கதவை இழுத்துப் பூட்டி விட்டுப் புறப்பட்ட அவர்கள் நால்வரும் நாவற்குடா புதிய கல்முனை வீதியை வந்நடைந்தபோது அங்கு ஒருபெரும் சனவெள்ளம் அலை மோதிக் கொண்டிருந்தது. அந்தக்காட்சி வீடுகள் எல்லாம் வீதிக்கு வந்துவிட்டதோ என்று கதிரவனை எண்ண வைத்தது.



காலை எட்டு மணியளவில் வீதியின் இருமருங்கிலும் திரண்டு நின்ற அந்தச் சனங்களின் முகங்களைப் பயம், கலவரம், பரபரப்பு, ஆத்திரம் என்னும் உணர்ச்சிகள் ஆட்டிப் படைக்க, வார்த்தைகளில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம் நன்கு தெரிந்தது.எதிர்பாராத இந்நிகழ்வால் உணர்ச்சியின் உருவகங்களாகவே தோன்றிய அந்த மக்களைக் கண்ட கதிரவனுக்கு அவர்கள் மீது அனுதாபம் தான் ஏற்பட்டது.

### அதிகாரம் :- 01

இந்தச் சனங்கள் எப்போதும் இப்படித்தான். ஒரு சின்ன விடயமென்றாலும் கொஞ்சம் கூட சிந்திக்காமல் உணர்ச்சிக்கு அடிமைகளாகி விடுகின்றார்கள். இதனால் இவர்கள் சந்திக்கும் பிரச்சனைகளும் அவலங்களும், எத்தனையோ . . . உணர்ச்சி இருக்கும் இடத்தில் அறிவு இருப்பதேயில்லை.

இப்படி தனக்குள் சிந்தித்த கதிரவன் தனது தாயைப் பார்த்து, நீங்க மூண்டு பேரும் போய் ரெக்னிக்கல் கொலிஜில நில்லுங்க . . . நான் கல்லடிப் பாலம் வரை போய்ப் பாத்திற்று வாறன் . . . என்று கூறிவிட்டு சைக்கிளைத் தள்ளினான்.

பதற்றமும் பரபரப்பும் நிறைந்த அந்தச் சூழ்நிலையில் மகன் கல்லடிப் பாலம் வரை போவதை விரும்பாத அவன் தாய் கமலம், தம்பி இந்த நேரத்தில ஏன் அங்க போறா ? கல்லடிப் பாலத்திற்கு மேலால தண்ணி பாயுதெண்டு சனங்கள் கதைக்குதுகள் . . . வா . . எல்லாரும் போய் ரெக்னிக்கல் கொலிஜில நிப்பம் என்றாள்.

மனைவி கமலத்தின் பேச்சைக் கேட்ட கணவன் செல்வநாயகத்திற்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது. நீ என்ன பேய்க்கதை கதைக்கிறா. ..?கல்லடி பாலத்திற்கு மேலால தண்ணி பாஞ்சா மட்டக்களப்பு முழுவதும் அழிஞ்சி போயிருக்கும். கொஞ்சம் கூட யோசியாம சனங்கள் கதைக்கிறதையெல்லாம் நம்புறதா ? அவர் வார்த்தையில் சூடு பறந்தது.

தாயின் பயத்தையும் தந்தையின் துணிச்சலையும் கண்ட கதிரவன் இலேசாக சிரிக்கின்றான். தமையனின் சிரிப்பில் கலந்து கொண்ட சந்தியா. . சரி, சரி. . றோட்டில நிண்டு கொண்டு சண்டை பிடியாதங்க . . சனங்கள் நம்மைப் பார்த்து சிரிக்கப் போறாங்க . . . என்று கூறிவிட்டு அண்ணா நீங்க போய் பாத்திற்று வாங்க . . . எதற்கும் கவனம் என்றாள் எச்சரிக்கைத் தொனியில்.

– தொடர்கதை –

சைக்கிளில் ஏறி அமர்ந்த கதிரவன், பெடலை மெதுவாக மிதிக்கின்றான். வீதியில் திரண்டு நின்ற சனங்கள் அவனது கவனத்தைக் கவர்கின்றனர். நாவற்குடா, நொச்சிமுனை , கல்லடி எல்லாம் தீர்த்தக்கரை போல காட்சி தருகின்றது. காதில் பூ வைப்பதிலும் கயிறு திரிப்பதிலும் கெட்டிக்காரர்களான நமது சனங்களின் கதைகள் அரைகுறையாக அவன் காதில் விழுகின்றன.

பாவம் இந்தச் சனங்கள். மரத்தால விழுந்தவனை மாடு மிதித்த மாதிரி. இருபதாண்டு காலம் நடைபெற்ற யுத்தத்தால அனுபவித்தது போதாதென்று இப்போது கடலும் இவர்களைப் பதம் பார்த்து விட்டது. எந்தக் கடலை நம்பி காலமெல்லாம் வாழ்ந்தார்களோ அந்தக் கடலே இப்படி காலைவாரி விடலாமா? நம்பியவர்களை நட்டாற்றில் விடும் குணம் மனிதனுக்குத்தான் உண்டு. இந்தக் குணத்தை இயற்கையும் அவனிடமிருந்து பெற்றுக்கொண்டு விட்டதா ? இது என்ன அழிவின் ஆரம்பமா ? கதிரவன் அங்கலாய்த்தான்.



கடல் கோள் பற்றி இதற்கு முன்பு தமிழ் இலக்கியங்களிலும் தொல் பொருள் ஆய்வு நூல்களிலும் தான் அவன் படித்திருக்கின்றான். 'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள' என்ற அந்தச் சிலப்பதிகார வரிகளை நினைத்துப் பார்த்த கதிரவனுக்கு, கடல் கொண்ட தமிழ் நாடு அவன் முன்தோன்றிப் பயமுறுத்தியது.

நிகழ்காலத்திலும் கடந்த காலத்திலும் நீந்தியபடி மெதுவாகவே சைக்கிளில் சென்ற கதிரவனின் கண்களில் கல்லடிப்பாலம் தெரிகின்றது. வாழ்வில் எத்தனையோ முறை அதன் ஊடாகப் பயணம் செய்த அவனுக்கு இன்று அதனை வித்தியாசமாகப் பார்ப்பது போல ஓர் உணர்வு.

நல்ல காலம் அம்மா பயந்தது போல கல்லடிப்பாலம் தாண்டு போகல்ல . . . என்று தனக்குள் பெரும் ஆத்ம திருப்தியோடு சொல்லிக் கொண்ட அவன், குவியல் குவியலாக பிணங்களைச் சுமந்தவாறு பாலத்தின் ஊடாக வாகனங்கள் செல்வதைக் கண்டு அதிர்ச்சியடைந்தான்.கூடவே நாவலடி முற்றாக அழிஞ்சிப் போச்சி என்ற கூக்குரலும் புலம்பலும் அவனை அளவிற்கு மீறி உணர்ச்சி வசப்பட செய்தன.

**வாகரைவாணன்**

நாவலடி அழிஞ்சி போச்சா? சனங்கள் சொல்வது உண்மையா? என்று குமுறிய அவன் மனத்தில் ஆரணி வந்து நின்றாள். ஆரணி என்ன ஆனாள்? அவள் குடும்பத்திற்கு என்ன நடந்தது ? என்று மீண்டும் மீண்டும் எழுந்த கேள்விகளுக்குள் சிக்கிக் கொண்ட அவன் இப்போதே அங்கு போய்ப் பார்த்தால் என்ன என்று எண்ணினான்.அந்த எண்ணம் ஒரு ஆவேசமாக எழுந்தது.

கதிரவனின் ஆவேசத்தை புரிந்து கொண்டது போல அவனது சைக்கிளும் கல்லடி – டச்பார் வீதியில் வேகமாக இறங்கியது. ஆனால் அந்த வேகத்தை றோட்டு முழுவதும் நிரம்பி வழிந்த சன வெள்ளமும் அங்கு நிலவிய அசாதாரண சூழ்நிலையும் தடுத்து விட்டன.

அழுகையும் புலம்பலும் பிணங்களுமாகவே நிறைந்திருந்த அந்தப் பிரதேசத்திலிருந்து விரக்தியோடும் வேதனையோடும் திரும்பிய கதிரவனும் ஒரு பிணம் போலவே ஆனான். அவன் சைக்கிள் நாவற்குடா நோக்கி ஆமை வேகத்தில் அசைந்தது.

மெதுவாகச் சைக்கிளை மிதித்து வந்த தமையனை மஞ்சந்தொடுவாய் ரெக்னிக்கல் கொலிஜ் வாசலில் நின்றவாறே கவனித்த சந்தியா, அவன் சைக்கிளை விட்டு இறங்கும் முன்பே என்ன அண்ணா, உங்கட முகம் ஒரு மாதிரியாய் இருக்கு ? ஏன் அங்கு ஏதும் நடந்ததா ? என்றாள்.

தங்கை சந்தியாவின் கேள்விக்கு என்ன சொல்வதென்றே தெரியாது தடுமாறினான் கதிரவன். ஆனாலும் தனது உணர்ச்சிகளை ஓரளவு கட்டுப்படுத்தியவனாய் எங்கேயோ பார்த்தபடி சொன்னான். சந்தியா நாவலடி முற்றாக அழிஞ்சி போச்சாம். வேன்களில் குவியல் குவியலாக பிணங்கள் . . . அந்தப் பக்கம் முழுவதுமே சாவீடு போலத்தான் . . . ஒரே அழுகை மயம் . . . ஆரணியைப் பற்றியும் ஒன்றும் அறியமுடியல்ல . . .

ஆரணி என்ற பெயரைக் கேட்டதும் சந்தியா அப்படியே அசையாது நின்றாள் . . . அவள் கண்களில் நீர் திரண்டு வழிந்தது.

( தொடரும் )

சிங்களவரின் முன்னோன் என்று கருதப்படும் விஜயன் இலங்கையில் காலடி வைக்கும் முன்பே (கி .மு.5ம் நூ .ஆண்டு) இங்கு சைவ சமயம் தழைத் தோங்கி வளர்ந்தது

வண . வல்பொல இராகுல
( இலங்கையில் பௌத்த வரலாறு – பக்கம் 44 )



# புத்தர்பிரானே ........

*அரவிந்தன்*

புத்தர் பிரானே . . . .
ஒன்றும் புரியவில்லையே
நித்தம் கலகம்
இது என்ன
நேர்த்திக்கடனா?

காவிகள்
களத்தில் இறங்கலாமா?
பாவி அரசியலில்
இவர்கள்
பகடைக் காய்களா?

ஊரெல்லாம்
உனது சிலைகள் எதற்காக?
போர் நடத்தவா?
இது என்ன
புது வியூகம் ?

உண்ணா விரதம்
ஒருவருக்கும் தெரியக் கூடாது
அது
வீதியில் எதற்கு ?
விளம்பரத்திற்கா ?

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# பிட்டும் தேங்காய்ப் பூவும்

ஈரினம் எனினும் இலங்கையில் நாங்கள்
ஓர் தாய் மக்கள் ! உலகிது அறியும்

பிட்டும் தேங்காய்ப் பூவும் போல
ஒட்டிய உறவு; உடைப்பவர் இல்லை!

ஈரினம் தன்னை இணைத்திடும் பாலம்
ஆருயிர்த் தமிழே! அறிவோம் நாங்கள்!

பண்பாடென்பதிலும் பகிர்தல் உண்டு
மண்ணதன் வாசம் மாறிடுமாமோ?

அரசியல் கருத்து ஆயிரம் இருப்பினும்
இரகசியம் இல்லை! ஈரினம் பிரியா!

வடக்கும் கிழக்கும் நமது வாழ்விடம்
தடுப்பவர் இல்லை! தமிழ்தான் விடுமோ?

கடந்த காலக் கசப்புக்கள் எல்லாம்
தொடர்ந்திடுமாமோ? தொலைத்துப் போட்டோம்!

ஒன்றுபட்டு உறவினைக் காப்போம்
நன்றிது உணர்ந்தால் நமக்கேன் துயரம்?

எதிரிகள் இங்கே என்னதான் செய்யினும்
உதிரிகள் அவர்கள்! ஓர்நாள் வீழ்வார்!

வியாசர்